# NON – MAJOR ELECTIVE COURSE (NMEC-1)

## Introduction to Indian Constitution

## Unit – V

### V. Local Self Government:

### V.1. Election commission of India (with Powers and Functions):

**இந்தியத் தேர்தல் ஆணையம்:**

இந்திய அரசமைப்பின் உறுப்பு 324 ஓர் தேர்தல் ஆணையத்தினை அமைப்பதைப் பற்றி விளக்குகிறது. இது சுதந்திரமாகவும், நடுநிலையாகவும், ஒழுங்கான முறையிலும் தேர்தல்களை நடத்துகிறது. இவ்வாணையமானது நாடாளுமன்றம், சட்டமன்றம், குடியரசுத் தலைவர், துணைக் குடியரசுத் தலைவர் தேர்தல்களை மேற்பார்வையிட்டு, வழிகாட்டுவதுடன் தேர்தல்களையும் நடத்துகிறது.

**தேர்தல் ஆணையம் - ஓர் சுதந்திரமான அமைப்பு:**


இந்தியத் தேர்தல் ஆணையம் அமைக்கப்பட்டதன் நோக்கமே ஓர் நிரந்தரமான மற்றும் சுதந்திரமான தேர்தல் அமைப்பு அவசியம் என்பதுடன் ஆட்சியாளர்கள் மற்றும் ஆளும் கட்சியினரின் அரசியல் அழுத்தத்திலிருந்து விடுபட்டு சுதந்திரமாகத் தேர்தலை நடத்துவதற்கும் அத்துடன் நாடாளுமன்றம், சட்டமன்றம், குடியரசுத் தலைவர் மற்றும் துணைக் குடியரசுத் தலைவர் தேர்தல்களை நடத்தும் பொறுப்பும் தேர்தல் ஆணையத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

நாட்டில் நியாயமான, நேர்மையான தேர்தல் நடைபெறுவதை உறுதிப்படுத்திட அரசமைப்பால் நேரடியாக உருவாக்கப்பட்ட நிரந்தரமான, சுயாட்சியான அமைப்பு தேர்தல் ஆணையம்.

அரசமைப்பு உறுப்பு 324, நாடாளுமன்ற இரு அவைகள், மாநிலச் சட்டமன்றங்கள், குடியரசுத் தலைவர், துணைக் குடியரசுத் தலைவர் தேர்தல்களைக் கண்காணித்தல், வழிகாட்டுதல், கட்டுப்படுத்துதல் ஆகிய அதிகாரங்களை தேர்தல் ஆணையத்திற்கு முழுமையாக வழங்குகிறது.

இவ்வாறு, இந்திய தேர்தல் ஆணையம் மத்திய – மாநில அரசுகள் இரண்டுக்குமான பொது அமைப்பாக இயங்குகிறது. மாநலங்களில் உள்ளாட்சி அமைப்புக்களான பஞ்சாயத்துகள், நகராட்சிகளுக்கான தேர்தல்களை இந்திய தேர்தல் ஆணையம் நடத்துவதில்லை.

இதையொட்டி மாநிலத் தேர்தல் ஆணையங்கள் அமைத்துக்கொள்ள அரசமைப்பு வழிவகுத்துள்ளது




**இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அதிகாரங்கள் மற்றும பணிகள்:**

- வாக்காளர் பட்டியல் தயாரித்தல்.
- வாக்காளர் பட்டியலைத் திருத்துதல்.
- தொகுதிக்கான இடங்களை ஒதுக்கீடு செய்தல்.
- தேர்தல் நடத்துதல்.
- தேர்தலை மேற்பார்வையிட்டு வழிகாட்டுவதுடன் அது தொடர்பான அனைத்து விவகாரங்களையும் கட்டுப்படுத்துதல்.
- அரசியல் கட்சிகளுக்கு அங்கீகாரம் அளித்தல்.
- கட்சிகளுக்கான சின்னங்களை ஒதுக்கீடு செய்தல்.
- சுதந்திரமான மற்றும் நேர்மையான தேர்தலை உறுதி செய்தல்.
- தேர்தல் விவகாரங்கள் தொடர்பான அனைத்து கேள்விகளுக்கும் குடியரசுத் தலைவர் மற்றும் சம்பந்தப்பட்ட மாநில ஆளுநர்களுக்குத் தேர்தல் ஆணையம் அறிவுரை வழங்குதல்
- நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களின் தகுதியிழப்பினை முடிவு செய்தல்.
- இந்தியக் குடியரசுத் தலைவர் மற்றும் மாநில ஆளுநரால் பரிசீலனைக்கு அனுப்பப்படும் மனுக்கள் மற்றும் பிரச்சனைகளைத் தீர்த்தல்.

- ஓர் அரசியல் கட்சியில் பிளவு ஏற்பட்டால் எழும் தேர்தல் சின்னம் தொடர்பான சச்சரவுகளில் முடிவெடுத்தல்.
- தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் தேர்தல் செலவினங்களின் உச்சவரம்பினை இறுதி செய்யும் அதிகாரம்.
- தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் சொத்துக்கள் தொடர்பான ஆவணப்பத்திரங்களை கேட்டுப் பெறும் பணி.
- தேர்தல் செலவினக் கணக்கினை ஓர் வேட்பாளர் தேர்தல் ஆணையத்திடம் சமர்ப்பிக்கவில்லையெனில் அவரைத் தகுதியிழப்பு செய்யும் அதிகாரமும் கடமையும்.
- தேர்தல் முடிந்தபின்னர் முறைப்படி அவை அமைக்கப்பட்டதற்கான அறிவிப்பினை வெளியிடுதல் போன்றவை இந்தியத் தேர்தல் ஆணையத்தின் பணிகளாகும்.

## V.2. UPSC (with Powers and Functions):

**ஒன்றிய அரசுப்பணியாளர் தேர்வாணையம்:**

ஒன்றிய அரசுப்பணியாளர் தேர்வாணையம் (Union Public Service Commission) என்பது இந்திய அரசுப் பணிகளுக்கான தகுதி வாய்ந்த பணியாளர்களைத் தேர்வு செய்வதற்காக அமைக்கப்பட்ட ஒரு தனி அமைப்பாகும்.

இவ்வமைப்பு இந்திய அரசின் பல அரசுத் துறைகளின் பணிகளுக்கான பணியாளர்களுக்கான விண்ணப்பங்களைப் பெற்று அவர்களுக்கான எழுத்துத்தேர்வு மற்றும நேரடித் தேர்வு ஆகியவற்றின் மூலம் தகுதி வாய்ந்த பணியாளர்களைத் தேர்வு செய்து கொடுக்கும் பணியைச் செய்து வருகிறது.

இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, இந்திய வெளிநாட்டுப்பணி போன்ற பணிச் சேவைகளை ஒழுங்குபடுத்தி அப்பணியாளர்களின் பணிக்கால வாழ்வு, பயிற்சி மற்றும் சேவை விதிகளை கட்டுப்படுத்தி வருகிறது.

இந்திய அரசியலமைப்பு பகுதி XIV – (ஒன்றிய மற்றும் மாநிலங்களின் கீழான சேவைகள் - விதிகள் 315 முதல் 323 வரை) ஒன்றிய அளவில் மற்றும் மாநில அளவில் தேர்வாணையங்களை நிறுவுவது குறித்து விளம்புகிறது.

**ஒன்றிய அரசுப்பணியாளர் தேர்வாணையம் தோன்றிய வரலாறு:**

உயர்நிலை அரசுப் பணிச்சேவைகளில் இந்தியர்களும் பங்கேற்க வேண்டும் என்ற இந்திய அரசியல்வாதிகளின் விருப்பத்திற்கிணங்க 1926-ஆம் ஆண்டு அப்போதைய பிரித்தானிய இந்திய அரசு முதல் தேர்வாணையத்தை அக்டோபர் முதல் நாளன்று நியமித்தது.

இவ்வாணையத்தின் செயற்பாடுகள் பரிந்துரைகள் என்ற நிலையிலேயே இருந்தமையால் இந்திய அரசியலாருக்கு இது திருப்தி அளிக்கவில்லை. ஆகவே பிரித்தானிய அரசு கூட்டு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தை (Federal Public Service Commission) 1935-ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின் கீழ் அமைத்தது. இச்சட்டம் மாநிலங்களிலும் மாநில அளவில் தேர்வாணையங்கள் அமைத்திட வழி செய்தது.

விடுதலைக்குப் பிறகு அரசுப்பணிகளுக்கு பாரபட்சமற்ற முறையில் பணியாளர்களை தேர்ந்தெடுக்கவும் பணியாளர்களின் உரிமைகளைக் காத்திடவும் தன்னாட்சி நிலைபெற்ற காப்பான அமைப்பொன்றின் தேவையைக் கருத்தில் கொண்டு அரசியலமைப்புப் பேரவை கூட்டு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்கு அரசியலமைப்பு அங்கீகாரம் வழங்கி ஒன்றிய அரசுப்பணியாளர் தேர்வாணையம் உருவானது.

மாநிலத்தின் ஆளுநர் வேண்டினால், குடியரசுத் தலைவரின் ஒப்புமையுடன் மாநிலப் பணியாளர்களுக்கானத் தேடலையும் மேற்கொள்ளலாம். அவ்வாறு மணிப்பூர் மற்றும் கேரள மாநிலங்களுக்கு செயலாற்றிவருகிறது.

**தேர்வாணைய உறுப்பினர்கள்:**

இந்திய அரசியலமைப்பின் 315-ஆம் ஷரத்தின் கீழ் ஒன்றிய அரசுப்பணியாளர் தேர்வாணையம், தலைவர் மற்றும் பத்து உறுப்பினர்களுடன் அமைக்கப்பட்டுள்ளது. இவர்களின் பணிவிதிகள் ஒன்றிய அரசுப்பணியாளர் தேர்வாணையம் (உறுப்பினர்கள்) ஒழுங்குமுறைச் சட்டம், 1969-ன் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளன.

தேர்வாணையத் தலைவரும் உறுப்பினர்களும் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுகின்றனர். 50 விழுக்காடு உறுப்பினர்கள் குறைந்தது பத்தாண்டுகளாவது அரசுப்பணியாற்றிய பணியிலுள்ள அல்லது ஓய்வு பெற்ற அரசுப்பணியாளர்கள் ஆவர்.

ஒவ்வொரு உறுப்பினரும் ஆறு ஆண்டுகள் அல்லது 65 அகவை வரை(இரண்டில் எது முதல் நிகழ்வோ அதுவரை) பதவியில் இருக்கலாம்.

குடியரசுத் தலைவருக்கு எந்நேரமும் தம் பணிவிலகல் விண்ணப்பத்தை அளிக்கலாம். தவிர, உறுப்பினரின் துர்நடத்தை (அத்தகைய நடத்தை விசாரிக்கப்பட்டு உச்சநீதிமன்றத்தில் உறுதி செய்யப்பட்டிருக்க வேண்டும்) நொடிப்பு நிலை எய்தல், பணி தொடர்பில்லாத வெளிவேலைகளை பணம் பெற்றுக்கொண்டு செய்தல் அல்லது அவரது உடல் மற்றும் மனநிலை குறித்த குடியரசுத் தலைவரின் மதிப்பீட்டில் இலாயக்கற்றவர் போன்ற காரணங்களினால் குடியரசுத் தலைவர் அவரை பணிநீக்கம் செய்யலாம்.

தேர்வாணையத்திற்கு உதவிட ஓர் செயலர் மற்றும் இரு கூடுதல் செயலர்கள் தலைமையில் பல இணைச் செயலர்கள், துணைச் செயலர்கள் மற்றும் பிற பணியாளர்கள் அடங்கிய செயலகம் செயல்படுகிறது.

தற்போது கல்வியாளர் டாக்டர். பிரதீப் குமார் ஜோஷி அவர்கள் தேர்வாணையக் குழுத் தலைவராக உள்ளார்.

**தேர்வாணையத்தின் பணிகள்:**

1. ஒன்றியத்தின் பல்வேறு பணிச்சேவைகளுக்கு மற்றும் பணியிடங்களுக்ககு பணியாளர்களை போட்டித் தேர்வுகள் நடத்தி தெரிந்தெடுத்தல்.
2. நடுவண் அரசின் பல்வேறு பணிச்சேவைகளுக்கு மற்றும் பணியிடங்களுக்கு பணியாளர்களை நேர்முகத் தேர்வுகள் நடத்தி தெரிந்தெடுத்தல்.
3. பணி உயர்வு மற்றும் வேற்றுப்பணிக்கு மாற்றங்களில் அதிகாரிகளின் தகுதி குறித்து அரசுக்கு பரிந்துரைத்தல்.

4. பல்வேறு பணிச்சேவைகள் மற்றும் பணியிடங்களுக்கு பணியமர்த்துவது குறித்து அனைத்து விடயங்களிலும் அரசுக்கு ஆலோசனை வழங்கல்.
5. பல்வேறு அரசுப் பணிச்சேவைகளில் ஒழுங்கு நடவடிக்கை எடுப்பது.
6. சிறப்பு ஓய்வூதியம் வழங்கல் சட்ட செலவினங்களை ஈடு செல்யதல் போன்ற இதர விடயங்கள்.

குடியரசுத் தலைவரும், மாநில ஆளுநர்கள் சம்பந்தப்பட்ட பொதுப்பணிக்கழகத்தை கலந்தாலோசிக்கக் கடமைப் பட்டவர்கள். ஆனால் பொதுப்பணிக்கழகங்களின் ஆலோசனைகளை கட்டாயம் அவர்கள் ஏற்க வேண்டும் என்கிற அவசியம் இல்லை.

யூனியன் பொதுப் பணிக்கழகம் குடியரசுத் தலைவருக்கும், மாநிலப் பொதுப் பணிக்கழகங்கள் அவற்றின் கவர்னர்களுக்கும் வருடாவருடம் தாங்கள் செய்யும் வேலைகளைப் பற்றி ஆண்டறிக்கை ஒன்றை சமர்ப்பிக்க வேண்டும்.

அதை குடியரசுத் தலைவரும், ஆளுநர்களும் முறையே பாராளுமன்றத்திலும், சட்டமன்றத்திலும் சமர்ப்பிக்க வேண்டும். நாடடிலுள்ள எல்லா மக்களின் நம்பிக்கைக்குரிய பொதுப் பணிக்கழகங்களின் பரிந்துரைகள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

**V.3. Powers and Functions of Municipalities and Panchayats:**

**V.3. நகராட்சி மற்றும் பஞ்சாயத்து அமைப்புகளின் அதிகாரங்களும் பணிகளும்:**

**இந்தியாவில் உள்ளாட்சி:**

**உள்ளாட்சி அமைப்பு – விளக்கம்:**

ஒரு பகுதி அல்லது ஒரு கிராமம், சிறிய நகரம் அல்லது மாநகரம் போன்ற சிறிய சமூகத்தினை நிர்வாகம் செய்யும் அமைப்புக்களே உள்ளாட்சி அமைப்புக்கள் எனப்படுகின்றன. உள்ளாட்சி அமைப்புக்களுக்கு நெருக்கமாகவும் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதமாகவும், அடிமட்டத்திலிருந்து செயல்படுகின்றன. உள்ளாட்சி அமைப்பின் உறுப்பினர்கள் உள்ளூர் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இவ்வமைப்புக்கள் உள்ளூர் தேவைகளை மேலாண்மை செய்கின்றன. உள்ளாட்சி அமைப்புக்கள் உள்ளூர் சமூகத்திற்குப் பணியாற்றுவதுடன் தன்னாட்சிக் குடியரசுக்கும் கருவியாகச் செயல்படுகின்றன.

**உள்ளாட்சிகள் - வரலாற்றுப் பின்னனி:**

உள்ளாட்சி அமைப்பு இந்தியாவில் தொன்றுதொட்டு காணப்படும் கருத்துரு ஆகும். இது பிற்காலச் சோழர்கள் அல்லது தஞ்சை சோழப்பேரரசு காலத்தில் உச்சநிலையை அடைந்தது. மௌரியப் பேரரசு காலத்திலும் உள்ளாட்சி அமைப்புகளைப் பற்றிய ஆவணக் குறிப்புகள் உள்ளன. பண்டைய இந்தியா முழுவதும் நிலப்பிரபுத்துவத்தின் முறையின் தாக்கத்தால், உள்ளாட்சி அமைப்புக்களின் முக்கியத்துவம் குறைந்தது.

ரிப்பன் பிரபுவின் 1882-ஆம் ஆண்டு தீர்மானத்தின்படி, மேற்கத்திய நாடுகளின் மக்களாட்சி முறையின் அடிப்படையில் 19-ஆம் நூற்றாண்டின் கால் இறுதியில் இவ்வமைப்பு இந்தியாவில் புத்துயில் பெற்றன. நவீன உள்ளாட்சி அமைப்புக்களுக்கு அடித்தளமிட்டதால் ரிப்பன் பிரபு, உள்ளாட்சி அமைப்புகளின் தந்தை என அழைக்கப்படுகிறார்.

1935 இந்திய அரசுச் சட்டம், மாகாணங்களில் தன்னாட்சியை அறிமுகப்படுத்தியது. இச்சட்டம் 1937இல் நடைமுறைக்கு வந்தது. காங்கிரஸ் ஆட்சி அமைத்த மாகாணங்களில், ஊரக வளர்ச்சிக்கு சிறப்புக் கவனம் அளிக்கப்பட்டது. பஞ்சாயத்து ராஜ் அமைப்புக்களிலிருந்து நகரங்கள்வரை கட்டமைக்கப்படவேண்டும் என்பது காந்தியடிகளின் திட்டங்களின் ஒரு முக்கியக் கூறாக இருந்தது.

இந்திய விடுதலைக்குப் பின்பு, இந்திய அரசமைப்பினை உருவாக்கியவர்கள் காந்தியடிகளின் கிராம தன்னாட்சிக் கொள்கையினைப் பெரிதும் கவனத்தில் கொண்டு செயலாற்றினர். கிராமங்கள் நிறைந்த இந்தியாவில், கிராம ஊராட்சிகளின் உருவாக்கம் ஒரு சமூக இயக்கமாகவே அமைந்தது. விடுதலைப் போராட்டத்தின்போது பஞ்சாயத்து மறுசீரமைப்பு என்பது மக்களுக்கு நம்பிக்கையை ஊட்டியது.

**நகராட்சி:**

ஒரு இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் வாழும் பகுதி நகராட்சி எனப்படும். நகர சபைத் தலைவர் மற்றும் பகுதி உறுப்பினர்கள் (கவுன்சிலர்) மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அவர்களது பதவிக்காலம் ஐந்தாண்டுகளாகும். இந் நகராட்சியினை நிர்வாகம் செய்ய ஒரு நகராட்சி ஆணையர் அரசால் நியமிக்கப்படுகிறார்.

மக்கள்தொகை 15,000-க்கு மேலும் மூன்று இலட்சத்திற்கு கீழும் உள்ள சிறு நகரப் பகுதிகளில் நகராட்சிகள் ஏற்படுத்தப்படுகின்றன. அதேபோல் அதன் வரிவருவாய், மற்ற வருவாய்கள் அரசு நிர்ணயித்த அளவுக்குள் இருத்தல் வேண்டும். இதை அவ்வப்போது அந்த மாநிலங்கள் தீர்மானிக்கும்.

நகராட்சியின் வகையினம் அ –வில் (ஒரு இலட்சமும் அதற்கு மேற்பட்ட மக்கள்தொகை கொண்டது)அதில் 20 எண்ணிக்கைக்கு குறையாமலும், 50 எண்ணிக்கைக்கு மிகாமலும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் இருப்பர்.

அதேபோல் வகையினம் ஆ-வில் ( 50 ஆயிரம் முதல் ஒரு இலட்சம் வரை மக்கள் தொகை கொண்டது) 15 முதல் 30 வரை,

வகையினம் இ-இல் (50ஆயிரத்திற்கு கீழ் மக்கள்தொகை கொண்டது) 10 முதல் 15 வரை தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் இருப்பர்.

சட்டமன்ற தொகுதி எல்லைக்குள் வருகின்ற நகராட்சிகளில், அந்தந்த சட்டமன்ற உறுப்பினர் பதவி வழி உறுப்பினராக நகராட்சியில் இருப்பார். மூன்று உறுப்பினர்கள் வரை அரசாங்கம் நகர சபைக்கு நியமிக்கலாம்.

தலைவர் மற்றும் துணைத்தலைவர் தேர்தலில் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் பங்குபெற்று வாக்களிக்க முடியாது. நகராட்சி உறுப்பினர்கள் மக்களால் ரகசிய வாக்கெடுப்பு முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

ஒட்டுமொத்த நகராட்சி பகுதியும் எத்தனை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படவேண்டுமோ அத்தனை வார்டுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. சட்டமன்ற தொகுதி வாக்காளர் பட்டியலில் நகராட்சி எல்லைக்குள் உள்ளவர்களே பொதுவாக நகராட்சியின் வாக்காளர்களாக எடுத்துக்கொள்ளப்படுவர்.

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு சின்னங்கள் ஒதுக்கப்படுகின்றன. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் சின்னங்கள் அக்கட்சியின் வேட்பாளருக்கு வழங்கப்படும்.

தேர்தல் முடிவுகள் வெளியான 14 நாட்களுக்குள் துணை ஆணையர் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கூட்டி அவர்களுக்கு பதவிப் பிரமாணம் செய்யுதுவைத்து தலைவர் மற்றும் துணைத் தலைவரைத் தேர்ந்தெடுக்க வகை செய்யவேண்டும்.

நகர பஞ்சாயத்துக்களை பொறுத்தவரையிலும் ஓர் நகரப் பகுதியில் உள்ள பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினரின் மக்கள் தொகைக்கு ஏற்ற விகிதாச்சாரத்தின் அடிப்படையிலேயே தனி தொகுதிகள் பஞ்சாயத்துகளில் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. மேலும் கூடுதலாக பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினப் பெண்கள் உட்பட மொத்த இடங்களில் 30 சதவிகிதம் பெண்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மக்கள் தொகை மூன்று இலட்சத்திற்கு குறைவாக உள்ள நகராட்சிகளில் ஒன்றுக்கும் மேற்பட்ட வார்டுகளை இணைத்து வார்டு குழு ஏற்படுத்தப்படும். அந்தந்த வார்டுகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், வார்டு குழு உறுப்பினர்களாக இருப்பர்.

ஒவ்வொரு நகராட்சியிலும் நிலைக்குழுக்கள் ஏற்படுத்தப்படும். இதில் நகராட்சியின் தலைவர் மற்றும் துணைத் தலைவர், மேலும் வகையினம் அ-வாக இருந்தால் நான்கு உறுப்பினர்களையும் வகையினம் ஆ-வாக இருந்தால் இரண்டு உறுப்பினர்களையும் நகராட்சி உறுப்பினர்கள் தங்களுக்குள் தேர்ந்தெடுப்பர்.

இந்நிலைக் குழுவின் பதவிக்காலம் இரண்டு ஆண்டுகளாகும். நகராட்சியின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள். தேர்ந்தெடுக்கப்பட்ட நகராட்சி, சட்டப்படி செயல்படாத போது அது பதவியிலிருந்து அகற்றப்படலாம்.

நகர சபை ஆண்டுக்கு ஒருமுறையாவது கூடவேண்டும். அக்கூட்டத்திற்கு நகர சபைத் தலைவர், அவர் இல்லையெனில் நகரசபைத் துணைத் தலைவர் தலைமை ஏற்பார்.

நகர சபை தன் பணிகளைச் செய்ய பல்வேறு துணைக்குழுக்களை அமைக்கிறது. இதில் நகர்மன்ற உறுப்பினர்கள், உறுப்பினர்களாக இருப்பர். அவர்கள் பிரச்சனைகளை ஆராய்ந்து, தீர்வுக்கான பரிந்துரைகளை அளிப்பர். இந்த குழுக்கள் இரண்டு வகைப்படும். அவை சட்டப்பூர்வ குழுக்கள், சட்டப்பூர்வமற்ற குழுக்கள் என இரு வகைப்படும். சிறப்புத் தேவைகளுக்காக நகராட்சி அமைப்புகள் சில துணைக் குழுக்களை ஏற்படுத்தலாம்.

**நகர் மன்றம்:**

நகர் மன்ற சட்டத்தின்படி தேர்வு செய்யப்பட்ட நகர்மன்ற உறுப்பினர்களில் ஒருவர் நகர்மன்றத் தலைவராக ஒருமாதத்திற்குள் தேர்வு செய்யப்படுகின்றார். நகர்மன்றம் தேர்தல் முடிந்தவுடன் உருவாக்கப்படுகின்றது.

இந்த நகர்மன்றத் தலைவரின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகளாக இருக்கிறது. நகர்மன்றம் ஒன்று அல்லது இரண்டு துணை தலைவரைத் தேர்வு செய்கின்றது. இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் உள்ள நகர்மன்றத் தலைவர்கள் பயணப்படி மற்றும் மாத ஊதியம் பெறுகின்றனர்.

நகர்மன்ற கூட்டங்களைக் கூட்டுவதம், அதற்கு தலைமை வகிப்பதும் நகர்மன்றத் தலைவரின் பணியாகும். மேலும் தவறு செய்யும் நகர்மன்ற உறுப்பினர் மேல் ஒழுங்கு நடவடிக்கையையும்

எடுக்கிறார். நகர்மன்றத்தின் முதன்மைப் பேச்சாளர் நகர்மன்றத் தலைவர் ஆவார். அரசுடன் தகவல் தொடர்பும் மற்றும் அரசு விழாக்களில் பங்குகொள்வதும் இவருடைய பணியாகும்.

ஒவ்வொரு நகர்மன்றத்திற்கும் ஒரு நிர்வாக அலுவலர் உள்ளார். அவரை மாநில நிர்வாகம் நியமனம் செய்கின்றது. நகர்மன்ற அலுவலர்கள் அந்த நிர்வாக அலுவலரின்கீழ் பணிபுரிபவர்களாக உள்ளனர்.

நகர்மன்றத்தை ஆளுகின்ற அமைப்பு நகர்மன்ற குழு ஆகும். இது நகர நிர்வாகத்திற்கு பொறுப்புள்ளது.

மேலும் சட்டம் இயற்றுவது, நகர்மன்ற கூட்டத்தின் நேரம், கூட்டத்தை நடத்துவது போன்ற முடிவுகளை நிர்வாக அலுவலர் மேற்கொள்கிறார்.

நகர்மன்ற உறுப்பினர்கள் குடிமக்களின் குறைகளைக் கேட்டறிய வேண்டும், பொதுமக்களுடன் தொடர்பில் இருத்தல், நகராட்சி அலுவலர்ககள் மீதான பொதுமக்களின் புகார்களை உரிய நிர்வாகத் தலைமையிடம் முறையிடல், நகர்மன்ற கூட்டத் தொடரில் மக்களின் குறைகளை எடுத்துரைப்பதும் இவர்களின் பணியாகும்.

**நகர்மன்றத்தின் பணிகள், பொறுப்புகள்:**

நகர்மன்றத்தின் பணிகளும் பொறுப்புக்களும், இந்திய அரசமைப்பில் 12-வது அட்டவணையில் கூறப்பட்டுள்ளது. 74-வது அரசமைப்பு சட்டத் திருத்தம், ஒரு மாவட்டம் முழுமைக்கும் ஒரு வளர்ச்சி திட்டவரைவை ஏற்படுத்தும் நோக்கில் மாவட்ட திட்டக்குழுவை ஏற்படுத்தியது. இதன்மூலம் மாவட்டத்திற்கு திட்ட அறிக்கை தயார் செய்யப்படுகிறது. உள்ளாட்சி மற்றும் நகராட்சியில் உருவாக்கப்படும் திட்டத்தினை ஒன்றுசேர்ப்பது குழுவின் பணியாகும்.

1992-ஆம் ஆண்டு சட்டத்தின்படி மாவட்டத் திட்டக்குழுவில் மொத்த உறுப்பினர்களில் ஐந்தில் நான்கு பங்கிற்கு குறையாமல் இருத்தல் வேண்டும். இந்த உறுப்பினர்களை மாவட்ட பஞ்சாயத்து உறுப்பினர்கள் மற்றும் அந்த மாவட்டத்தில் உள்ள நகர்மன்ற உறுப்பினர்கள் தங்களுக்குள் தேர்ந்தெடுக்கின்றனர்.

இந்த எண்ணிக்கை அந்த மாவட்டத்தின் நகர்ப்புற மக்கள் தொகை மற்றும் கிராமப்புற மக்கள்தொகையின் விகிதாச்சார அடிப்படையில் அமைந்திருக்கும்.

நகராட்சி அமைப்புகள் தனது பணிகளை மேற்கொள்வதற்கான செலவினங்களுக்கு வரி, கட்டணம் மூலம் வருவாய் ஆதாரங்கள் வழங்கப்பட்டுள்ளது. நகராட்சி அமைப்புகள் தனது நிதி ஆதாரங்களை உயர்த்திக்கொள்ள பலவகை வரிவிதிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவை:

- நிலவரி,
- கட்டட வரி,
- விளம்பரத்தின் மீதான வரி,

- நெடுஞ்சாலை சுங்க வரி மற்றும்
- சாலைவரி முதலானவை.

74-வது சட்ட திருத்தத்தின்படி, மாநில அரசுகள் இந்த சட்ட திருத்தத்தை தங்கள் மாநில சட்டத்தில் இனைத்துக்கொண்ட ஒரு வருட காலத்திற்குள், மாநில நிதிக்குழுவை அமைத்திடல் வேண்டும்.

**மாநில நிதிக்குழு கீழ்கண்டவற்றில் பரிந்துரைகளை அளிக்கலாம்.**

அ. மாநில அரசாங்கத்திற்கும் மாநகராட்சிக்குமிடையே வரி, சுங்க சட்டங்கள் போன்றவற்றின் மூலமாக வரும் வருவாயை பகிர்ந்தளித்தல்.

ஆ. அந்த வருவாயை மாநிலத்திலுள்ள நகராட்சியின் பல நிலைகளுக்கும் ஒதுக்கீடு செய்தல்.

இ. நகராட்சிகளின் வரி வகைகள், சுங்க கட்டணங்கள் போன்றவற்றை நிர்ணயம் செய்தல்.

ஈ. மாநிலங்களுக்கு நிதி வழங்க உதவும் மானியங்கள்.

உ. நகராட்சியின் நிதிநிலைமையை மேம்படுத்தத் தேவைப்படும் நடவடிக்கைகள்.

ஆனால், யதார்த்தத்தில், மாநிலச் சட்டம் எந்தெந்த பணிகளை நகராட்சிகள் செய்யலாம் என வரையறுத்திருக்கிறதோ அந்த பணிகளை மட்டுமே நகராட்சிகள் செய்கின்றன.

மாறிவரும் அரசியல் சூழ்நிலைகள் மற்றும் நாட்டின் தேவைகளின் வழியே காணும்போது நகராட்சியின் பணிகள் மீதான அந்த கட்டுப்பாடு சரியான ஒரு செயல்பாடாகக் கருத முடியவில்லை.

சிறப்பு தேவை செயலாண்மைகளை ஏற்படுத்துவதன் மூலம் நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ உள்ளாட்சியின் பணிகளைத் தனதாக்கிக் கொள்ளும் மாநில அரசாங்கத்தின் போக்கு அதிகரித்து வருகிறது.

**நகராட்சியின் அதிகாரமும் பொறுப்புகளும்:**

- நகரத் திட்டங்கள், நகரத்தை வடிவமைத்தல்.
- கட்டங்களைக் கட்டுதல், நிலத்தை பயன்படுத்துதலை ஒழுங்குமுறைப்படுத்துதல்.
- பொருளாதார மற்றும் சமூக மேம்பாட்டிற்கு திட்டமிடல்.
- சாலைகள் மற்றும பாலங்களை பராமரித்தல்.
- வீட்டு உபயோகத்திற்கு குடிநீர் விநியோகம் செய்தல்.
- பொதுச் சுகாதாரம் மற்றும் துப்புரவு பணிகளை மேற்கொள்ளுதல்.
- தீயணைப்பு பணிகள்.
- நகர்ப்புற காடு மற்றும் சுற்றுப்புறச் சூழலை பாதுகாத்தல்.

- சமூகத்தில் நலிவடைந்தோர், ஊனமுற்றோர், மனநிலை குன்றியவர்கள் நலன்களை பாதுகாத்தல்.
- குடிசைப் பகுதிகளை மேம்படுத்துதல், தரத்தை உயர்த்துதல்.
- நகர்புற வறுமை ஒழிப்பு.
- பூங்காக்கள், தோட்டங்கள், விளையாட்டு மைதானங்கள் போன்ற நகர்புற வசதிகளுக்கு ஏற்பாடு செய்தல்.
- கல்வி மற்றும கலாச்சார அம்சங்களின் வளர்ச்சியை ஊக்குவித்தல்.
- இடுகாடு மற்றும் சுடுகாடு மைதானங்களைப் பராமரித்தல்.
- கால்நடைக்கான குடிநீர் குட்டைகள் அமைத்தல் மிருகவதையை தடைசெய்தல்.
- பிறப்பு, இறப்பு ஆகியவற்றின் பதிவுடன்கூடிய மிக முக்கியமான புள்ளி விவரங்களை சேகரித்தல்.
- பேருந்து நிறுத்துமிடங்கள், கழிவறை, சாலை விளக்கு போன்ற பொது வசதிகளை செய்துகொடுத்தல்.
- வதைக் கூடங்கள் மற்றும் தோல் பதனிடும் தொழில்களை ஒழுங்குபடுத்துதல்.

## Powers and Functions of Panchayats:

**பஞ்சாயத்து அமைப்புகளின் அதிகாரங்களும் பணிகளும்:**

**கிராம ஊராட்சி:**

கிராமங்களில் செயல்படும் உள்ளாட்சி அமைப்புகள், கிராம ஊராட்சி என்று அழைக்கப்படுகின்றன. தலைவர் மற்றும் பகுதி உறுப்பினர்கள் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். (18 வயது பூர்த்தியடைந்தோர்) அவர்களது பணிக்காலம் ஐந்து வருடங்கள் ஆகும். கிராம ஊராட்சியின் ஆய்வாளராக மாவட்ட ஆட்சியர் செயல்படுகின்றார். ஐந்நூறுக்கும் மேற்பட்ட மக்கள் தொகையைக் கொண்டுள்ள ஒவ்வொரு கிராமமும் கிராம ஊராட்சியாக உருமாறியுள்ளது.

**கிராம ஊராட்சியின் செயல்பாடுகள்:**

- குடிநீர் வழங்குதல்
- தெருவிளக்குகளைப் பராமரித்தல்
- சாலைகளைப் பராமரித்தல்
- கிராம நூலகங்களைப் பராமரித்தல்
- சிறிய பாலங்களைப் பராமரித்தல்
- வீட்டு மனைகளுக்கு அனுமதி அளித்தல்
- வடிகால் அமைப்புகளைப் பராமரித்தல்
- தொகுப்பு வீடுகளைக் கட்டுதல்
- தெருக்களைச் சுத்தம் செய்தல்
- இடுகாடுகளைப் பராமரித்தல்
- பொதுக் கழிப்பிட வசதிகளைப் பராமரித்தல்

**விருப்பப்பணிகள்:**

1994-ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்த தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் சட்டம் கீழ்க்கண்ட விருப்ப செயல்பாடுகளை உள்ளாட்சி அமைப்புகளின் மூலம் நடைமுறைப்படுத்தியது.

- கிராமங்களிலுள்ள தெரு விளக்குகளைப் பராமரித்தல்
- சந்தைகளையும திருவிழாக்களையும் நடத்துதல்
- மரங்களை நடுதல்
- விளையாட்டு மைதானங்களைப் பராமரித்தல்
- வண்டிகள் நிறுத்தப்படும் இடங்களில் உள்ள வாகனங்கள், இறைச்சி கூடங்கள் மற்றும் கால்நடைகளின் கொட்டகைகள் ஆகியவற்றைப் பராமரித்தல்.
- பொருட்காட்சிகள் நடைபெறும் இடங்களைக் கட்டுப்படுத்துதல்.

**வருவாய்:**

மூன்றடுக்கு அமைப்பு உள்ள ஊரக உள்ளாட்சி அமைப்பில் கிராம ஊராட்சி மட்டுமே வரிவிதிக்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ளது.

**வரிகள்:**

- சொத்துவரி
- தொழில்வரி
- வீட்டுவரி
- குடிநீர் இணைப்புக்கட்டணம்
- நில வரி
- கடைகள் மீது விதிக்கப்படும் வரிகள்

**கிராமசபை கூட்டங்கள்:**

ஒவ்வொரு ஊராட்சியிலும் அவ்வூராட்சியின் அதிகார எல்லைக்குள்ளே வசிக்கும் மக்களே கிராம சபை உறுப்பினர்களாக இருப்பர்.

ஊராட்சித் தலைவர் கூட்டங்களுக்குத் தலைமைதாங்குவார். கிராம சபை கூட்டங்களில் வரவுசெலவு கணக்குகளும் திட்டங்களால் பயனடைந்தோர் பற்றியும் கலந்தாலோசிக்கப்படும்.

ஒரு வருடத்தில நான்கு முறை கிராம சபைக் கூட்டங்கள் நடத்தப்படும்.

1. சனவரி – 26 - குடியரசு தினம்
2. மே – 1 - உழைப்பாளர் தினம்.
3. ஆகஸ்ட் - 15 - சுதந்திர தினம்
4. அக்டோபர் – 2 - காந்தி பிறந்த தினம்.